**IN THE COURT OF THE DISTRICT MUNSIF, SENDAMANGALAM.**

**O.S.No. 73/2024** **P.W.1**

Deposition of witness for solemnly affirmed by Tmt.S.Sangeetha, Assistant of this court on 03.03.2026 in accordance with the provision of the Act 1873.

| | | |
|---|---|---|
| Name | : | கோபி |
| Father Name: | : | முத்துசாமி |

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.வ.எண்.183/2007 வழக்கு மாண்புமிகு நாமக்கல் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விவரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் கிரையம் வாங்குவதற்கு 10 நாட்களுக்கு முன்பாக ஆவணங்களை பார்த்ததில் தெரியவந்தது. மேற்படி வழக்கில் உள்ள ஆவணங்களை படித்துப் பார்த்துள்ளேனாஎன்றால் படித்துப்பார்த்துள்ளேன். மேற்படி ஆவணங்களை பரிசீலித்தபோது மேற்படி அ.வ.எண்.183/2007 வழக்கு நிலுவையில் இருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் அப்போது வழக்கு தள்ளுபடியாகிவிட்டது, நிலுவையில் இல்லை. மேற்படி வழக்கு மீண்டும் கோப்பிற்கு எடுக்கக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு நிலுவையில் இருந்த விவரம் தெரியுமா என்றால் நான் கிரையம் பெறும்போது எந்த மனுவும் நிலுவையில் இல்லை. எனக்கு கிரையம் கொடுத்ததாக சொல்லும் வீரப்பன் என்பவரிடம் மேற்படி வழக்கு விவரத்தை கேட்டுத் தெரிந்துக்கொண்டேனா என்றால் மேற்படி வீரப்பன் இறந்துவிட்டார் அவரது வாரிசுகளிடம் கேட்டதில் வழக்கு எதுவும் நிலுவையில் இல்லை என்று சொல்லியுள்ளார்கள். நான் பரிசீலித்ததில் வழக்கு எதுவும் நிலுவையில் இல்லை.

நான் தாவா சொத்தை யாரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் மேற்படி இறந்துபோன வீரப்பனின் மனைவி மகள் மற்றும் மகன் ஆகியோரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளேன். மேற்படி வாரிசுதாரர்களிடம் மேற்படி வழக்கை பற்றி கேட்டேனா என்றால் வழக்கு தொடரப்பட்டு தள்ளுபடியாகிவிட்டது என்று சொன்னார்கள். மேற்படி அ.வ.எண்.183/2007 மீண்டும் கோப்பிற்கு எடுக்க இடையில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.1/2025 கடந்த 24.01.2025 தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வழக்கின் விவரத்தை பார்த்து தெரிந்துக் கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல,

2024ம் வருடம் கிரையம் வாங்கும்போது வழக்கு ஆவணங்களை பார்த்துள்ளேன் அப்போது எந்த வழக்கும் நிலுவையில் இல்லை. தற்போது மேற்படி அ.வ.எண்.183/2007 எண்ணில் தாக்கல் செய்துள்ள ரெஸ்டோர் மனு நிலுவையில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் கடந்த ஒருமாதத்திற்கு முன்புதான் தெரியும். மேற்படி வழக்கில் கருப்பகவுண்டருக்கு மேற்படி வழக்கில் உள்ள 1ம் வாதி மாராயி மூலம் காளியப்பன் என்ற ஆண்மகன் பிறந்ததாக சொல்லியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, மேற்படி வழக்கு ஆவணங்களை படித்துப்பார்க்கவில்லை. நான் எவ்வளவு ஆண்டுகளாக வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் 12 ஆண்டுகளாக வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறேன். ஒரு மாதத்திற்கு முன்பே மேற்படி ரெஸ்டோர் மனு நிலுவையில் உள்ள விவரம் தெரிந்த பின்பு அதை பெற்று படித்துப்பார்க்க நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் நகல் பெற்று படித்துப்பார்க்க நகல் மனு தாக்கல் செய்துள்ளேன்.

மேற்படி வழக்கில் உள்ள 1ம் வாதி கருப்பகவுண்டரின் மனைவி மாராயி என்றும், 2ம் வாதி மகள் சங்கரம்மாள் (எ) கமலம் என்றால் மேற்படி பிராதை நான் படித்துப்பார்க்கவில்லை அதனால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி மாராயி-1 அவரது மகள் சங்கரம்மாள் (எ) கமலம்-2 ஆகியோர்கள் வாதிகளாக இருந்து கருப்பண்ணகவுண்டரின் மருமகள் செல்வி-1, செல்வி மகள் சரண்யா மற்றும் வீரப்பன் பெயரில் மேற்படி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று கேட்டுத் தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக் கொண்டேன். மேற்படி வழக்கில் மேற்படி கருப்பண்ண கவுண்டர் கடந்த 30.10.1987ம் தேதியன்று இன்டஸ்டேட்டாக காலமாகிவிட்டார் என்று சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். மேற்படி இறந்துபோன கருப்பண்ண கவுண்டருக்கு மாராயி, சங்கரம்மாள்(எ)கமலம் மற்றும் சரண்யா ஆகியோர்கள் சட்டப்படியான வாரிசுகள் என்றால் சரிதான் 2015ல் தீர்ப்பாணையை படித்துப் பார்த்து தெரிந்துக்கொண்டேன். மேற்படி தீர்ப்பாணை என்பது மேற்படி வழக்கில் தள்ளுபடியான தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை என்றால் சரிதான். மேற்படி வழக்கில் மேற்படி வழக்கிலுள்ள வாதிகளுக்கும், 2ம் பிரதிவாதிக்கும் தலா 1/3 பங்கு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியாக ஞாபகமில்லை. காளியப்பன் இறந்த பின்னிட்டு அவருக்கு வரவேண்டிய 1/9 பாகத்தில் அந்த வழக்கில் 1, 2

பிரதிவாதிகளுக்கு தலா ஒரு பங்கும் 1ம் வாதிக்கு ஒரு பங்கும் பாத்தியம் ஏற்பட்டதால் 1ம் வாதிக்கு 4/9 பாகமும், 2ம் வாதிக்கு 3/9 பாகமும் ஏற்பட்டது என்றால் சரியாக ஞாபகமில்லை. மேற்படி கருப்பண்ண கவுண்டர் இறப்புக்கு பின்னிட்டு அவரது மருமகளான செல்வி கருப்பண்ண கவுண்டர் தனக்கு உயில்சாசனம் எழுதிவைத்தாக போர்ஜரியாக ஆவணம் தயார் செய்யப்பட்டு அந்த பதிவு செய்யப்படாத உயில்சாசனத்தின் அடிப்படையில் எனக்கு கிரையம் கொடுத்த வீரப்பன் பெயரில் மோசடியான கிரையப்பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி மோசடியான உயில்சாசனத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன்.

மேற்படி கருப்பண்ண கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்தின் அசல் ஆவணத்தையும் நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்படி வழக்கில் கருப்பண்ண கவுண்டருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்து சம்மந்தப்பட்ட அசல் ஆவணங்கள் பூராவும் மேற்படி செல்வி எடுத்துச் சென்றுவிட்டதாக வழக்கு பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு பிராதில் மேற்படி செல்வி எடுத்துச் சென்ற அசல் ஆவணங்களை அடிப்பனடையில் போர்ஜரியாக தயார் செய்து அதை வீரப்பன் பெயரில் பொய்யான கிரையப்பத்திரம் ஏற்படுத்தியுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி வீரப்பன் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் சட்டப்படி அமலுக்கு வரவில்லை அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி போர்ஜரியாக தயார் செய்யப்பட்ட உயில்சாசனம் மேற்படி வழக்கில் உள்ள வாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. மாராயி மற்றும் சங்கரம்மாள்(எ)கமலம் ஆகியோர்கள் செல்வியை அணுகி தாவா சொத்துக்களைபொ றுத்து பாகப்பிரிவினை செய்துகொள்ளலாம் என 10.07.2007ம் தேதியன்று கேட்டதில் ஒத்துவராதால் வாதிகள் பாகப்பிரிவினை மற்றும் சுவாதீனம் கோரி செல்விக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கருப்பண்ண கவுண்டர் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணத்தை எப்போது பார்த்தேன் என்றால் நான் கிரையம் பெறுவதற்கு 15 நாட்களுக்கு முன்பு பார்த்தேன். எத்தனை ஆவணங்கள் இருந்தது என்றால் கருப்பண்ண கவுண்டர் பெயரில் 3 கிரைய ஆவணங்கள் இருந்தது.

தாவா சொத்தை கிரையம் பெறும்போது மேற்படி வழக்கில் உள்ள வாதிகளை அணுகி தாவா சொத்துக்களை அனைத்தும் வாங்குவதால் அவர்களுக்கு உண்டான பாகத்தை பொறுத்து கிரயமாகவும், விடுதலைப்பத்திரம் மூலமாகவோ வாங்க நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் 2015ம் வருடத்தில் மேற்படி வழக்கு தள்ளுபடியானதால் மேற்படி கேட்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

பாகப்பிரிவினை வழக்கு பொறுத்து முழுமையாக விசாரணைக்கு பின்னிட்டுதான் யாருக்கு தீர்ப்பாகுமோ அவர்களிடமிருந்துதான் தாவா சொத்தை கிரையம் வாங்க வேண்டும் என்று சொன்னால் மேற்படி வழக்கு தள்ளுபடியாகி 10 வருடத்திற்கு மேலாகியும் மனு எதுவும் தாக்கல் செய்யாததால் நான் கிரையம் பெற்றுள்ளேன். நான் சொல்வது தவறு என்றும் சிலபல காரணத்திற்காக மனுக்கள் திருப்பப்பட்டது என்றும் மேற்படி வழக்கு நிலுவையை தெரிந்துக்கொண்டுதான் மேற்படி வழக்கின் வாதிகளை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் வீரப்பன் இறந்தபின்னிட்டு அவரது வாரிசுதாரர்களை மேற்படி வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பாகப்பிரிவினை வழக்கு முழுமையான தீர்ப்புக்கு பின்னிட்டு மேல்முறையீடு செய்ய வாய்ப்புள்ளது என்றும் Defaultஆக தள்ளுபடி செய்யப்பட்டாலும் ரெஸ்டோர் செய்ய மீண்டும் வாய்ப்புள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வழக்கு நிலுவையில் இருந்ததென்றும், அதிலுள்ள உரிய நபர்களை அணுகி தாவா சொத்தை முழுமையாக கிரையம் பெறாதாதாலும் போர்ஜரியாக தயாரிக்கப்பட்ட உயில்சாசனத்தின் அடிப்படையில் வீரப்பன் பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணம் சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்றும், மேற்படி வீரப்பன் இறந்த பின்னிட்டு அவரது வாரிசுகளிடமிருந்து கிரையம் பெற்ற கிரையப்பத்திரமும் செல்லக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல.

கருப்பகவுண்டர் மகன் காளியப்பன், மகள் கமலம் மற்றும் மனைவி மாரியாயியை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அவரது மகள் கமலத்தை மட்டும் பார்த்துள்ளேன். மேற்படி காளியப்பன் அவரது பெற்றோரின் விருப்பத்திற்கு எதிராக செல்வி என்பவரை திருமணம் செய்துகொண்ட விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இவ்வழக்கை 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக எதற்காக தாக்கல் செய்துள்ளேன்

என்றால் மேற்படியார்கள் போர்ஜரியாக 2009ம் ஆண்டு ஏற்படுத்தியுள்ள கிரைய ஆவணம் செல்லத்தக்கதல்ல என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மாராயி மற்றும் கமலம் ஆகியோர்கள் சேர்ந்து 2, 3 பிரதிவாதிகளுக்கு போர்ஜரியாக ஒரு கிரையப்பத்திரத்தை ஏற்படுத்திக்கொடுத்துள்ளார்கள். நான் கிரையம் பெறப்பட்டதாக சொல்லும் சமயத்தில் நான் பதிவு அலுவலகத்திற்கு சென்றபோது வழக்கு சொத்தை பொறுத்து மேற்படி 2009 கிரையப்பத்திரத்தின் சங்கதிகளை தெரிந்துக்கொண்டேனா என்றால் சார்பதிவாளர் மூலம் மேற்படி கிரையப்பத்திரத்தை பற்றி தெரிந்துக்கொண்டேன். மேற்படி மாராயி மற்றும் கமலம் அவர்களுக்கு பாத்தியப்பட்ட 4/9, 3/9 பாகம் இருக்கும்போது அவர்கள் ஏற்கனவே 2009ல் கிரையம் செய்துகொடுத்துள்ள நிலையில் நான் தாவா சொத்தை விலைக்கு தயாராக இல்லை என்று சொல்லியுள்ளேனா என்றால் மேற்படி 183/2007 வழக்கு நிலுவையில் இருக்கும்போது 2009 கிரையப்பத்திரம் ஏற்படப்பட்டுள்ளதாலும் அது செல்லத்தக்கதல்ல என்பதாலும் அதை பொறுத்து கேட்க அவசியம் ஏற்படவில்லை. மேற்படி 2009 கிரயப்பத்திரத்தை 2009ம் ஆண்டிலேயே எனக்கு தெரியவந்தது என்று சொன்னால் சரியல்ல நான் கிரையம் வாங்கும் சமயத்தில்தான் தெரியவந்தது. தாவா சொத்திற்கு வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் பார்த்துள்ளேன்.

மேற்படி வில்லங்க சான்றிதழை வழக்கில் ஒப்படைத்துள்ளேனா என்றால் ஒப்படைத்துள்ளேன், சாட்சி மீண்டும் ஞாபகமில்லை என்று சாட்சியமளிக்கிறார். மேற்படி வில்லங்க சான்றிதழ் என்னிடம் இல்லை. உண்மையில் நான் தாவா சொத்தை பொறுத்து வில்லங்க சான்றிதழ் போட்டிருந்தால் வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றும், அதை தாக்கல் செய்தால் எனக்கு வழக்கு விரோதமாக ஏற்பட்டுவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் ஒப்படைத்தால் மாராயி மற்றும் கமலம் இவ்வழக்கு 2, 3 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்துகொடுத்த விவரம் தெரிந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது வழக்கு பிராதில் 4வது பத்தியில் கடந்த 15.10.1986ம் தேதியன்று கருப்பண்ண கவுண்டர் அவரது மருமகள் செல்வி பெயருக்கு உயில்சாசனம் ஏற்படுத்திக்கொடுத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது உயில்சாசனத்தை படித்துப்பார்த்து

தெரிந்துக்கொண்டேன். மேற்படி உயில்சாசனம் பதிவு செய்யப்படாததால் அதன் உண்மைத்தன்மையை பொறுத்து என்னால் சொல்லமுடியாது என்று சொன்னால் சொல்லமுடியும். மேற்படி அ.வ,எண்.183/2007 வழக்கில் உயில்சாசனத்தில் உள்ள கையெழுத்து கருப்பண்ண கவுண்டரின் கையெழுத்து மற்றும் அவரது கைரேகை கையெழுத்து நிபுணரால் 2010ம் ஆண்டு உறுதி செய்யப்பட்டுள்ளதால் மேற்படி உயில்சாசனம் உண்மையானது என்று சொல்கிறேன், மேற்படி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் ஆகவே 2010ம் ஆண்டிலேயே மேற்படி வழக்கின் கையெழுத்து நிபுணரின் அறிக்கை பற்றி எனக்கு எப்படி தெரியவந்தது என்றால் கிரையம் வாங்குவதற்கு முன்பு மேற்படி ஆவணங்களை படித்துப்பார்த்து தெரிந்துக்கொண்டேன். கருப்பண்ண கவுண்டரின் மனைவி மாராயின் இறப்பு சான்றிதழ் என்னிடம் யார் கொடுத்தார்கள் என்றால் வீரப்பனின் வாரிசுகள் கிரையம் செய்யும் சமயத்தில் என்னிடம் கொடுத்தார்கள். நான் கிரயம் பெற்ற தேதி 08.08.2024 ஆகும். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பே வீரப்பனின் வாரிசுகள் மேற்படி மாராயின் இறப்பு சான்றிதழை கொடுத்தார்களா என்றால் இல்லை கிரையம் பெறும் நாளன்று கொடுத்தார்கள்.

மேற்படி மாராயின் வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை அவர்கள் கொடுக்கவில்லை அதனால் தாக்கல் செய்யவில்லை. மேற்படி மாராயிக்கு கமலம் என்ற மகள் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி கையெழுத்து நிபுணரின் அறிக்கை வா.சா.ஆ.10 ஆவணத்தை யார் என்னிடம் கொடுத்தார்கள் என்றால் கிரையம் பெறுவதற்கு 15 நாட்களுக்கு முன்பாக நகலை கொடுத்தார்கள் கிரையத்தன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அசல் ஆவணங்களை கொடுத்தார்கள். மேற்படி அ.வ.எண்.183/2007 வழக்கில் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் நான் எப்போது வாங்கினேன் என்றால் கிரையம் பெறுவதற்கு 15 நாட்களுக்கு முன்பாக நகலை கொடுத்தார்கள் கிரையத்தன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அசல் ஆவணங்களை பெற்றேன். வா.சா.ஆ.8 ஆவணத்தை நான் கிரைய தேதியன்று வாங்கவில்லை என்றும் கடந்த 06.10.2021 தேதியன்றே பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வீரப்பனின் வாரிசுகள் மேற்படி தேதியில் வாங்கியிருக்கலாம் ஆனால் கிரையத்தன்று பெற்றேன்.

வா.சா.ஆ.14 இறப்பு சான்றிதழை கிரையத் தேதியன்று வீரப்பனின் வாரிசுகள் எனக்கு கொடுக்கவில்லை என்றும் மேற்படி ஆவணத்தை கடந்த 27.08.2024 ம் தேதியன்று பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் ஞாபகமில்லை ஆனால் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் அந்த தேதிதான் குறிப்பிடப்பட்டுள்ளது மேற்படி ஆவணத்தை எந்த தேதியில் இணையத்தில் பெறமுடியும். நான் ஏற்கனவே சொன்னதுபோல் வா.சா.ஆ.14 ஆவணத்தை நான் வீரப்பனின் வாரிசுகளிடமிருந்து கிரையம் வாங்கியதாக சொல்லும் காலகட்டத்தில் நாமக்கல் நகராட்சியிலிருந்து பெறவில்லை என்றும் மேற்படி ஆவணத்தை வழங்கிய நாள் 27.08.2024 என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சொல்லப்பட்டுள்ளது. அதேபோல் வா.சா.ஆ.11 ஆவணம் நான் சொல்வது போல் கிரைய தேதியன்று பெறவில்லை என்றும், மேற்படி ஆவணத்தை 06.09.2024 தேதியன்று பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நான் கிரையப்பத்திரத்தை பதிவு செய்யும்போது ஏற்கனவே தாவா சொத்தை பொறுத்து 2009ம் ஆண்டு கிரையப்பத்திரம் பதிவாகியுள்ளதால் என்னுடைய கிரையப்பத்திரத்தை பதிவு செய்ய இயலாது என்று சார்பதிவாளர் என்னிடம் தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். அதன்பேரில் மாண்புமிகு சென்னை நீதிமன்றத்தில் நீதி பேராணை மனுவில் உத்தரவு பெறப்பட்டேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணத்தை நான் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் நகல் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எனது பெயரில் கிரையம் ஏற்பட்டதாக சொல்லும் காலகட்டத்திலிருந்து 4 நாட்கள் கழித்து அதாவது 12.08.2024 அன்று நகல் பெற்றேன் என்றால் சரிதான்.

மேற்படி வா.சா.ஆ.6 கிரைய ஆவணத்தை படித்துப் பார்த்து தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். மேற்படி வா.சா.ஆ.6 கிரைய ஆவணத்தில் கருப்பண்ண கவுண்டரும், மாராயியும் சேர்ந்து சம்பாதித்த வருமானத்தை வைத்து குடும்பத் தலைவரான கருப்பண்ண கவுண்டர் கடந்த 15.06.1968ல் சொத்துக்களை மாராயி மற்றும் கமலம் ஆகியோர்கள் காளியப்பன் இறந்ததால் தாவா சொத்துக்களில் 1 நபரான மாராயிக்கு 4/9 பங்கும், கமலத்திற்கு 3/9 பங்கும் நாங்கள் இதுவரை சர்வசுதந்திரமாக ஆண்டு அனுபவித்து வருகிறோம், மேற்படி எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை நாளது தேதியில் ரூ.3 1/2 லட்சத்திற்கு சுத்தக்கிரையமும், சுவாதீனமும் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

வா.சா.ஆ.4 ஆவணமானது 07.02.2007ல் ஏற்பட்ட ஆவணம் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தில் செல்வி தனது மாமியார் மாரியாயி பற்றியோ தனது நாத்தனார் கமலத்தை பற்றியோ சொல்லவில்லை என்றால் சரிதான். 15.10.1986 தேதியில் பதிவு செய்யப்படாத உயில்சாசனத்தின் அடிப்படையில் பாத்தியப்பட்டதாக சொல்லியுள்ள மேற்படி ஆவணத்தில் கருப்பண்ண கவுண்டரின் வாரிசுகளை பற்றி எவ்வித சங்கதிகளும் சொல்லாமல் மேற்படி செல்வி போர்ஜரியாக ஒரு உயில் சாசனத்தை தயாரித்து அதனடிப்படையில் 07.02.2007 தேதியில் வீரப்பன் பெயருக்கு பெயரளவில் ஒரு வா.சா.ஆ.4 ஆவணத்தை ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்றும் மேற்படி ஆவணம் மாராயி மற்றும் கமலத்தை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. கருப்பண்ண கவுண்டர் பெயரில் ஏற்பட்ட 3 அசல் கிரைய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி அசல் கிரைய ஆவணங்களை நீதிமன்றத்தில் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் ஏற்கனவே அசல் பத்திரம் மோசமான நிலையில் உள்ளதால் அதன் சான்றிட்ட நகலை பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கருப்பண்ண கவுண்டர் பெயரில் ஏற்பட்ட 3 அசல் கிரைய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் மட்டுமே நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மேற்படி அசல் ஆவணங்கள் சிதிலடமடைந்தாலும் அதனை லேமினேசன் செய்து நீதிமன்றத்தில் சமர்ப்பித்தால்தான் விளம்புகை பரிகாரம் கோர முடியும் என்றும், அதனை தாக்கல் செய்யாததால் அதனடிப்படையிலும் இவ்வழக்கு தள்ளுபடியாக கூடியது என்று சொன்னால் சரியல்ல. 21.10.2009ல் ஏற்பட்ட ஆவணத்தின் விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் நேரடியாக தெரியாது படித்துபார்த்து தெரிந்துக்கொண்டேன். எனவே மேற்படி ஆவணம் போலியானது என்று எனக்கு சொல்ல உரிமை இல்லை என்றும், அதனடிப்படையில் மேற்படி கிரையப்பத்திரம் செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் கோரமுடியாது என்று சொன்னால் சரியல்ல. எனவே மேற்படி அடிப்படையில் வழக்கு தள்ளுபடியாகக் கூடியது என்று சொன்னால் சரியல்ல. மாராயி மற்றும் 1ம் பிரதிவாதி தங்களுக்கு பாத்தியப்பட்ட பங்கினை பொறுத்து மட்டும்தான் தாவா சொத்து 2, 3 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றும் எனவே தாவா சொத்து 2, 3 பிரதிவாதிகளுக்கு

பாத்தியப்பட்டது என்றும் எனவே வழக்கில் பரிகாரம் எதுவும் என்னால் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து 2, 3 பிரதிவாதிகளுக்கு சரியான பிரதிபிரயோஜனத்திற்கு கிரையம் பெற்று ஆண்டு அனுபவித்து வருவதால் அவர்களுக்கு எதிராக வில்லங்க பராதீனம் எதுவும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரமுடியாது என்று சொன்னால் சரியல்ல.

இவ்வழக்கில் 1, 2 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலுரையின் விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி பிரதிவாதிகள் தங்களது பதிலுரையில் சொல்லியுள்ள விவரங்கள் சரியா என்றால் சரியல்ல. மேற்படி பதிலுரையில் சொல்லியுள்ள விவரங்கள் சரியல்ல என்று குறிப்பிட்டு Reply Statement எதுவும் தாக்கல் செய்துள்ளனோ என்றால் இல்லை. தாவா சொத்துக்களை கருப்பண்ண கவுண்டர் மற்றும் அவரது மனைவி மாராயி ஆகியோர் கூட்டுக்குடும்பமாக கிரையம் பெற்ற சொத்து என்றும் கருப்பண்ண கவுண்டர் 03.10.1987 தேதியன்று காலமான பின்னிட்டு அவரது வாரிசுகளான அவரது மனைவி மாராயி மற்றும் மகளான 1ம் பிரதிவாதியும் சட்டப்படியான வாரிசுகள் என்றும் இறந்துபோன கருப்பண்ண கவுண்டரின் மருமகள் செல்வியின் மகள் சரண்யாவும் ஒரு வாரிசு என்றும் ஆக தாவா சொத்துக்களில் கருப்பண்ண கவுண்டரின் மனைவி மாராயிக்கு 4/9 பங்கும், மகள் கமலத்திற்கு 3/9 பங்கும் இறந்துபோன காளியப்பனின் மகள் சரண்யாவுக்கு 2/9 பங்கும் சட்டப்படி பாத்தியம் என்றும் மேற்படி விவரத்தை மறைத்து மேற்படி செல்வி போர்ஜரியாக ஒரு உயில்சாசனத்தை தயாரித்து மேற்படி மாராயி மற்றும் கமலத்தின் பங்குபாத்தியத்தை ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் அமலுக்கும், நடைமுறைக்கும்வ ராத ஒரு கிரைய ஆவணத்தை வீரப்பன் பெயருக்கு 07.02.2007 தேதியில் எழுதிக்கொடுத்துள்ள கிரையமும் சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்றும் மேற்படி வீரப்பன் இறந்த பின்னிட்டும் அவரது வாரிசுகளிடமிருந்து நான் பெற்ற கிரையமும் செல்லக்கூடியதல்ல என்றும் அதனால் பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் இவ்வழக்கு தள்ளுபடியாகக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**இவ்வழக்கிற்கு வழக்குமூலமே இல்லை என்பதாலும் அதனடிப்படையிலும் இவ்வழக்கு தள்ளுபடியாகக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.**

**மறு விசாரணை – இல்லை.**

Sd/-E.Ridhula
DM,SDM.

Sd/Gobi